Reg. No. M. 2997.

தனிப்பிரதி அணா 1.

ஆசிரியர் :
யாழ்ப்பாணம்
தென்கோவை
ச. கந்தைய பிள்ளை
தமிழ்ப் பண்டிதர்,
சிலோன்.

REPUBLIQUE FRANÇAISE

Liberté - Egalité - Fraternité

VITTAGAM

LE REDACTEUR
TENKOVAI
S. CANDIAH PILLAI
TAMIL PANDIT
JAFFNA
CEYLON.

JOURNAL HEBDOMADAIRE PARAISSANT LE JEUDI

வித்தகம்

வியாழக்கிழமை தோறும் வெளிவருவது

Bureau de la Direction:—
RUE D'AMBALATADOU AYER
MADAM NO. 4, Pondichery.

நத்தம்போற் கேடு முளதாகுஞ் சாக்காடும்
வித்தகர்க் கல்லா லரிது. குறள்.

காரியாலயம்:—
அம்பலத்தாடு ஐயர் மடத்து வீதி
நே. 4, புதுவை.

VOL. I. { புதுவை, பவ-ஸ்ரீ ஆனி-மீ உ௨-௳ (5—7—34) } No. 32.

திருமந்திரம்

விண்ணின் றிழிந்து வினைக்கீடாய் மெய்கொண்டு
தண்ணின்ற தாளைத் தலைக்காவல் முன்வைத்து
வுண்ணின் றுருக்கியோ ரொப்பிலா வானந்தக்
கண்ணின்று காட்டிக் களிம்பறுத் தானே.

களிம்பறுத் தானெங்கள் கண்ணுதல் நந்தி
களிம்பறுத் தானருட் கண்விழிப் பித்துக்
களிம்பணு காத கதிரொளி காட்டிப்
பளிங்கிற் பவளம் பதித்தான் பதியே.

மலங்களைந் தாமென மாற்றி யருளித்
தலங்களைந் தானற் சதாசிவ மான
புலங்களைந் தானப் பொதுவினு ணந்தியே
நலங்களைந் தானுண் ணயந்தா னறிந்தே.

ஈழநாடும் தமிழும்

யாழ்ப்பாணம் புன்னாலைக்கட்டுவன்
வித்துவான் ப்ரம்மஸ்ரீ சி. கணேசையர்
அவர்கள் எழுதியது

(பதிப்புரிமை கட்டுரை ஆசிரியர்க்கே உரியது)

(31-ம் வாரத் தொடர்ச்சி).

இவருடைய பாடலின் சிறப்பு உணர்தற்காகச் சிலகாட்டுதும் :—

நல்லை வெண்பா

கந்தகமுங், தானை வேற்காளை பருங் கன்னியரும்
கந்தகமுங், திக்களிகூர், நல்லூரே—சந்திர மா
மாவைப் பிழந்தார் மகிழ் பூப்ப வீரையிலோர்
மாவைப் பிழந்தார் மனை.

கந்தகமுந்து ஆனைவேல் காளையர்—கட்டுத்தறி முறியும்படி மதத்தால் முற்பட்டுச் செல்லும் யானைப் படையையுடைய வேல்வீரர். கந்தகம்—பந்தும் குதிரையும். சந்திரமாம் மா வைப்பு—பெரிய பொன்னுலகம். சந்திரம்—பொன். வீரை—கடல். பிழத்தல்—பிளத்தல். ழகர ளகர ஒற்றுமை பற்றிப் பிழத்தல் என்றார்.

நத்த முருங் கயத்தால் நன்கிளை கொள் பாடலத்தால்
சித்தச வேள்போலுந் திருநல்லை—முத்தின்
திருத்தணி மாமலையுந் திண்கோட்டிற் காட்டும்
திருத்தணிமா மலையான் சேர்வு.

நத்தம்—இருள், சங்கு. கயம்—யானை; குளம். கிளை—கிள்ளை; கொம்பு. பாடலம்—குதிரை; பாதிரி மரம். முத்தின் திருத்தணி கைம்மா—முத்தினாற் செய்த திருந்திய அணியாகிய கிம்புரியையுடைய யானை. கோடு—உச்சி. தணிகைமலை—செருத்தணிகைமலை. இவர் பாடிய நல்லைக் குறவஞ்சியினும் ஒன்று காட்டுதும் :—

திருவாரு நல்லைநகர்ச் செவ்வேற் பெருமானார்
இருவாலைக் குயத்தியரோ டின்பமுற்று ராம்மானை
இருவாலைக் குயத்தியரோ டின்பமுற்று ராமாயின்
தருவாரோ சட்டிகுடம் சாறுவைக்க வம்மானை
தருவார் காண் சட்டிகுடம் சாறுவைக்க வம்மானை.

இருவாலைக் குயத்தியர்—இரண்டு வாலைப் பருவமுடைய மகளிர். சட்டி—ஒரு நிதி. குடம்—கும்பமாதம். சாறு—திருவிழா. இங்கே இருவாலை என்னும் ஊரிலுள்ள குயத்தியரும், சட்டியும், குடமும், சாறும் தொனித்தல் காண்க. இவர் பாடிய தனிச் செய்யுளொன்றும் ஒன்று காட்டுதும்.

கொடிவளரு மணிமாடக் கோபுரஞ் சூழ் நல்லூரிற் குமாரமூர்த்தி
அடியருளத் திருளகல அமரர்முக மலரவர அணிமாவின்ற
கொடியினொடும் பிடியினொடும் குலவுமுடம் பிடியொடுங்—
[கோதண்டமேற்றி
மிடியகல மயிலேறி விடியவந்த தினகரன் போல் மேவினனே.

இச்செய்யுள் மிகவுஞ் சொற்சுவை பொருட்சுவை நிறைந்ததாய் விளங்குதல் காண்க. இவர் பாடிய ஊஞ்சலினும் ஒரு செய்யுள் காட்டுதும் :—

கனககவ ரத்நமணி மவுலி மின்னக்
கவின்கொணெற்றிச் சுட்டியினங் கதிர்கள் காலப்
பனகமணிக் குண்டலங்கள் பகலை வெல்லப்
பணித்தரளத் தொடைநிலவின் பரப்பை யென்ன
தனக விடைக்கிரங்கிய மேகலைகளார்ப்ப
அடியவரை யஞ்சலெனச் சிலம்பு மார்ப்பத்
தினகர மண்டலமனவு மதில் சூழ் கோவைத்
தேவி திருக்கண்ணகையே யாடிரூஞ்சல்.

இன்னும் மானிப்பாயில் அச்சிடப்பட்ட தமிழ் அகராதி தொகுத்த போது இவரே முதல்வராயிருந்து தொகுத்தனர் என்ப. இவருக்கு ஒரு மகனும் ஒரு மகளும் உண்டு என்பர். மகன் பெயர் இராமலிங்கமுதலியார். இவர் தமிழ் நன்கு கற்றவர் என்றும் பிரபுத்துவமுடையவர் என்றும் ஆறுமுக நாவலருடைய முதற்பிரசங்கத்தில் அக்கிராசனாதிபதியாய் இருந்தவர் என்றும் கூறுவர். மகளுடைய மகன் கந்தப்பிள்ளை என்பவர். இவர் தமது மாதா மஹராகிய சேனாதிராயரிடம் இலக்கண இலக்கியமும் சமய சாஸ்திரங்களும் கற்றவர்; சிவநேசர்; தருமவான்; பிரபு; சாந்த குணமுடையவர் எனவும் தாமாகவும் சுன்னாகம் முருகேச பண்டிதர் வாயிலாகவும் தம் ஊரிலும் அயலூரிலும் உள்ள மாணவர் பலர்க்குத் தமிழ் கற்பித்தவர் எனவும் முதியோர் சிலர் கூறுவர். "வித்தகம்" ஆசிரியரும், கொழும்பு அரசினர் ஆசிரிய கல்லூரியிலும் வித்தியா நிலையத்திலும் தமிழ்ப் பண்டிதராயிருந்தவரும், கவித்துவம் வாய்ந்தவருமாகிய தென்கோவை ச. கந்தையபிள்ளையவர்கள் ஷை கந்தப் பிள்ளையவர்களுக்குத் தௌஹித்திரராவர் (தௌஹித்திரன்—மகளுக்கு மகன்.)

(தொடரும்)

பெண்பாற் புலவர்கள்

யாழ்ப்பாணம் வேலணையூர்,

பண்டிதர் திரு கா. பொ. இரத்தினம்.

அவர்கள் எழுதியது

(பதிப்புரிமை கட்டுரை ஆசிரியருக்கே உரியது)

(29-ம் வாரத்தொடர்ச்சி)

பெருங்கோழி நாய்கன்மகள் நக்கண்ணையார்.

பெருங்கோழி நாய்கன் மகளாகிய கண்ணையார் என்னுமிவர் சிறப்புப் பொருளைத் தருமிடைச் சொல்லாகிய 'ந' என்பது கூட்டி நக்கண்ணையார் என அழைக்கப்பட்டார்.

இவர் சோழன் போர்வைக் கோப்பெருநற்கிள்ளியைத் தாமாக விரும்பி அவன் வென்றியைப் பாராட்டிப் பாடியுள்ள மூன்று பாக்கள் புறநானூற்றில் காணப்படுகின்றன. அவற்றுள் முதலாவது ஒத்த அன்பினுற் காமமுறுத வழியும் குணச் சிறப்பின்றித் தாமே காம முற்றுக் கூறிய

"அடிபுனை தொடுகழன் மையணற் காளைக்கென்
தொடி கழித் திடுதல்யான் யாயஞ் சுவலே
அடுதோண் முயங்க லவைநா ணுவலே
என்போற் பெருவி துப் புறுக வென்றும்
ஒருபாற் படாஅ தாகி
இருபாற் பட்டவிம் மைய லூரே"

என்பது.

'இருபாற்பட்ட' தென்பதற்கு யாயும், அவையுமாகிய இருகூற்றிற் பட்டதென்றும், அச்சமும் நாணும் உடையளாய் வருந்தும் எனது கூற்றிலும் நில்லாது, என் காதலறிந்து அவனோடு கூட்ட நினையாத யாய் கூற்றிலும் நில்லாது இருவர் கூற்றிலும் நிற்பதென்றும் இருபொருள் கூறலாம். யாயாகிய ஒரு கூற்றினிற்குமாயின் 'அடுதோண் முயங்குதற்கு' அஞ்சவேண்டா; அவையாகிய ஒரு கூற்றினிற்குமாயின் 'தொடி கழித்திடுதற்கு' அஞ்சவேண்டாவென்பது கருத்தாகும்.

அடுத்த செய்யுள் 'என்னுடைய தலைவன் புல்லரிசிக் கஞ்சியை உண்டானாயினும், வலிய தோளினை யுடையவன். அவன்றன் சிறைப்புறத்திருந்தும் யான் அவனைச் சேராமையால் பொன்னிறத்தைப்பெற்றேன். அவன் போரையேற்றுப் போர்க் களத்திற் புகின் கல்லென்னும் ஒலியையுடைய பேரூரின்கண் தோள்வலி பேசி இன்ட முடையராய்ப்போந்த வீரர்க்கு உப்புவிற்பார் அஞ்சத்தக்க எற்றிழிவை யுடைய துறையை யொப்பான் எனும் பொருளமைந்த,

'என்னை,
புற்கை யுண்டும் பெருந்தோ ளன்னே
யாமே,
புறஞ்சிறை யிருந்தும் பொன்னன் னம்மே
போரெதிர்ந் தென்னை போர்க்களம் புகினே
கல்லென் பேரூர் விழவுடை ஆங்கண்
ஏமுற்றுக் கழிந்த மன்னர்க்கு
உமணர் வெரூஉந் துறையன் னன்னே"

என்பது.

'என்னை புற்கை யுண்டும் பெருந் தோளனும், யாம் அவன் சிறைப்புறத் திருந்தும்பசப்பைவெல்லமாட்டாமையால் பொன் போன்றன மெனத் தம் வேட்கை மிகுதியால் கூறினரெனக் கம்மிடத்தவன் அருள் வையாமையால் பொன்னன்னம் என அழிந்து கூறினர் எனினுமாம். மற்றச் செய்யுள் 'என்றலைவனுக்கு ஊரின்தன்மையானும், நாடின்தன்மையானும் ஒரு சாரார் அவனதியல்பாய வென்றியை அவனது வென்றியென்பர். வேறொரு சாரார் அவனது வென்றியன்றென்பர். இருசாராரும் இவ்வாறு வேறுபடக்கூறிய இருநல்வார்த்தையும் நல்லவாயிருந்தன. அவ்வாறவர் கூறினும் யான் சிலம்பார்ப்பஓடிச்சென்று எம்முடைய மனையின் கணுள்ள பனையைப் பொருந்தி நின்று அவனது வென்றியாதல் கண்டேன். எனுங் கருத்தமைந்தது.

ஏதாவதொன்றனைச் சார்ந்து நின்று ஒருவரைப் பார்த்தலும் ஒன்றைக் கேட்டலும் நாணமுடைய குலமகளிர்க் கியல்பாதலின் "போந்தை பொருந்தி நின்றியான் கண்டனன்" எனக்கூறினர்.

"சிற்றினற்றூண் பற்றி நின்மகன்,
யாண்டுளனோ வெனவினவுதி"

எனுமடிகளையும் ஈண்டுப்பொருத்தி யுணர்க.

(தொடரும்)

சுத்தசாதகம்　　விலை அணா 2.

திருவாசக உண்மை
விலை அணா 2.

நந்தி வெளியீட்டு மன்றம்
புதுவை.

உ
திருவருள் துணை

ம
நந்தி பதி
கோல்

காலமுண் டாகவே காதல்செய்
துய்மின் கருதரிய
ஞாலமுண் டானொடு நான்முகன்
வானவர் நண்ணரிய
ஆலமுண் டானெங்கள் பாண்டிப்
பிரான்றன் அடியவர்க்கு
மூலபண் டாரம் வழங்குகின்
றான்வந்து முந்துமினே.
(திருவாசகம்)

வித்தகம்

புதுவை,
பவ-ஸ்ரீ ஆனி-மீ 22உ

யோகம்

யோகம் என்றால் என்னை? இயல்பாகவே ஓடுகின்ற மூச்சை ஒருவகைப் பயிற்சியால் அடக்கிக்கொண்டு வாயோடு கண் மூடி ஓரிடத்து வீற்றிருத்தலையே யோகம் எனப் போற்றுவர் உலகோர். மற்று அதன் உண்மைதான் யாதோ? எனின், அதுவே இச்சிறிய கட்டுரையில் ஒரு சிறிது கூறுவான் எடுத்துக் கொண்ட பொருளாகும். யோகம் என்பது பொருந்துதல்—ஒன்றுதல் எனப் பொருள்படும். எது ஒன்றுவது? எதனோடு ஒன்றுவது? எனின், மனம் மதியோடு ஒன்றுவது என்று கூறப்படும். மதி பதி ஆசான் மறை சிவம் என்பன ஒன்றே. மனமும் மதியும் இறைவன் திருவடி எனப்படும். இவையே திரோதான பாதமும் குஞ்சித பாதமுமாம் என்க. திரோதானம்=மறைப்பு; திரை; இருள்; மாயை எனப்படும். குஞ்சிதம்=வளைந்திருப்பது; ஒடுங்கியிருப்பது; மறைந்திருப்பது; மறையாய் இருப்பது எனப்படும். அமல ஐகாரம் என்னும் அமல நிறை—அமல ஒளி இதுவே என்க. மனம் என்பது திரோதானம். மதி என்பது அருள். "இரு பதமாவது இரவும் பகலும்" என்பது திருமந்திரம் (6ம். தந். திருவருள் வைப்பு, செ. 1.) வியாபகமும் வியாப்பியமும் எனினும் ஆம். மனம்=வியாபகம், திரோதானம். மதி=வியாப்பியம், அருள். மனம் வாசி பிராணன் என்பன ஒன்றே. "வட்டமிட்டொளிர் பிராணவாயு வெனுநிகளமோடு கமனஞ்செயும் மனமெனும் பெரிய மத்தயானையை" என ஆன்றோரும் கூறினர். யான் எனது என்னும் முனைப்பற்று வேறாக நிற்றலால்-புறமுகப்பட்டு நிற்றலால் புலன்களை நிறை முறையின்றி நுகர்ந்து அவச்சலனமடைந்து ஊசலாடுவதால் தன்புறும் மனமானது, சலனம் நிறையோடுடைய மதியுடன் மதியாகிய பதியுடன் ஒன்றிச் சலனமற்று நிற்பதே வாய்மையான யோகம் எனப்படும் என்பது. ஒரு நீரோடையில் காற்றினால் உந்தப்பட்டு அசைந்து கொண்டிருக்கும் தண்ணீருக்கு ஒப்பானது மனம் என்பது. மதி எனிலோ, சலனம் நிறையோடு உடையது. நிறை என்றால் அற்றது—அசைவற்றது என்ப. (நிறு+ஐ=நிறை.) அவச்சலனம் அற்றது, அசையாமல் அசைவது என்பதே பொருளாகும். அமல ஐகாரம் எனப்படுவது இதுவே என்க. இதனாற்றான் நிறை மறை எனப்பட்டது என்க. அது தான் மறைந்திருப்பது—பிறர் அறியாமல் இருப்பது—இரகசியப் பொருளாய் இருப்பது என்க.

"நிறை எனப்படுவது மறை; பிறர்
[அறியாமை."

என்பது கற்றறிந்தோர் ஏத்தும் கலித்தொகை. இறைவன் திருவடியாகிய அமல நிறையைக் கண்டவர்களே மனமும் மதியும் ஒன்றப் பெற்றவர்கள். இவர்களே சிவயோகிகள்—மெய்யடியார்கள் என்பது. மனமும் மதியும் எங்குள்ளன? எனின், நம் உடலகத்தே தான் உள்ளன என்று கூறப்படும். ஒன்று முன்னிலைக் கோரணிகளாகிய நன்மை தீமைகளில் ஈடுபட்டு ஊசலாடி அசைந்து வருந்துவது. மற்றையது அவச்சலனமடைந்து வருந்தாது அசையாமல் அசைந்து நிறையோடு இருப்பது. இவ்வுண்மையையே பின்வரும் பிரபல சுருதிகள் வற்புறுத்துகின்றன

முண்டக உபநிடதம்

"த்வா சுபர்ணா ஸயுஜா ஸகாயா
ஸமானம் வ்ருக்ஷம் பரிஷஸ்வஜாதே!
தயோரந்ய: பிப்பலம் ஸ்வாத்வத்த்ய
நச்நந்நந்யோ அபி சாகசீதி"

(இ-ள்.) இரண்டு அன்னங்கள் தோழர்களாய்க் கூடிக்கொண்டு பொதுவான அஃதாவது இரண்டிற்கும் உரிமையான ஒரே விருட்சத்தில் (சரீரம் என்பது) தழுவிக்கொண்டு இருக்கின்றன. ஒன்று அம்மரத்தின் இனிமையான பழத்தை உண்ணுகிறது மற்றது அதனை உண்ணாமல் பூரணமாக விளங்கிக் கொண்டு இருக்கிறது என்பதாம்.

திருமந்திரம்

அன்ன மிரண்டுள வாற்றங் கரையினிற்
றுன்னி யிரண்டுந் துணைப்பிரி யாதன்னந்
தன்னிலை யன்னந் தனியொன்ற தென்றக்
[கால்
பின்ன மடவன்னம் பேறணு காதே.

(ஷை 7-ம். தந். ஆன்ம விலக்கணம்,—
பிராணன், செ. 2.)

இவற்றால் மனமும் மதியும் பிரியாமல் பிரிந்து நிற்பன என்பதும், மனம்

மதியோடு ஒன்றுதலாற்றன் வீடுபேறு உளதாகும் என்பதும் வெள்ளிடையாம். இது பற்றியே "தன்னிலை அன்னம் தனி ஒன்ற தென்றக்கால் பின்ன மடவன்னம் பேறனுகாதே" என்று கூறப்பட்டது. தன்னிலை அன்னம் = மதி; பதி. பின்ன மடவன்னம்—மனம், பசு. "சிவன் சிவன்; சிவனே சிவன்." என்பது யஜுர் வேதத்தில் ஸ்கந்தோபநிஷத்

"சிவனெனச் சிவனென்னவேறில்லை"

என்பது திருமந்திரம்,

(ஷை தக். போதன் செ, 1.)

ஒன்றே எனின் ஒன்றல்ல. இரண்டே எனின் இரண்டுமல்ல. ஒன்றும் தான் இரண்டும் தான். இதனைத்தான் அவாச்சியம் அவாங் மனகோசரம் என்பது. விரிப்பிற் பெருகும். அமயம் நேர்ந்துழி விரித்துக் கூறப்படும்.

மனதின்கண் உள்ள அழுக்கு—அழுக்காகிய பாசம் நீங்கிய விடத்து அது மதியோடு ஒன்றி நிற்றல் பூரணப்படும். அதுவே மதியாகும் மதியாகிய பதியாகும் என்பது. தன்னிலையாகிய மனதின்கண் உள்ள அழுக்கு நீங்குவது எவ்வாறு? அழுக்கை அழுக்கால் அகற்றவேண்டும் என்னும் உபாயத்துக்கு ஒப்ப முன்னிலையாகி விளங்கும் இனமான அழுக்கை நிறைகண்டு பஞ்சிகரணித்தலாற்றன்—அருந்தல் பொருந்தல்கள் என்னும் வாய்மையான இயம நியமாதிகளாற்றன் அழுக்கு மனம் அவ் அழுக்கு நீங்கித் தூய்மை அடைய வேண்டும்—அமலம் பெற வேண்டும் என்க. இஃதன்றி வேறு தடம் யாது? இப் பெற்றி கைவருவது என்றால் எளிதின் முடியுமா? திருவருட் சகாயத்தாலன்றிச் சிவமுயற்சியால் ஆகுமா? எல்லாம் வல்ல சித்தனுகிய சற்குருநாதனுல் அருளப்படும் சாதக யோகங்களை வழுவறத் தாங்கி ஒழுகுதலாற்றன் இப் பெற்றி கைகூடவேண்டும். திருப்பெருந்துறைக் குருநாதன் அருளுபதேசம் பெற்று அவற்றை வழுவறத் தாங்கி ஒழுகிய மணிவாசகப் பெருமான் திருவாசகத் திருக்கழுக்குன்றப் பதிகத்தில்

"........................
இலங்கு கின்றநின் சேவடி களிரண்டும்
[வைப்பிட மின்றியே
கலங்கி னேன்கலங் காம லேவந்து
[காட்டி னாய்கழுக் குன்றிலே.

(ஷை செ. 3)

என்று அருளிச் செய்தார். சேவடிகள் இரண்டும் காணப்பட்டன—வைக்கப்பட்டன என்றார். சேவடிகள் எனப்பட்டன யாவை? அவை தாம் மனமும் மதியும் என்பன. குருநாதன் அருளிய சாதகங்களை அளவிறந்த கஷ்டங்களோடு வழுவின்றி அநுட்டித்துத் தமது உடலுயிரை விமலமாக விளைத்தமையால் மனமும் மதியும் ஒன்றப் பெற்றமையே சேவடிகள் காணப்பட்டன—வைக்கப்பட்டன என்பனவற்றின் பொருளாகும். இவை ஒன்றப் பெறுதற்கண் உளவாகும் துன்பம்—இதற்குரிய சாதகங்களை அநுட்டித்தற்கண் உளவாகும் கஷ்டம்—கர்மப் போராட்டம் அளவு படுவதாகுமா? அளவு படாதன என்பது "கலங்கினேன்" எனவும், "நாணொணாததோர் நாண மெய்தி நடுக்கடலுள் அழுந்தி" எனவும் அருளியவாற்றல் நன்கு புலப்படும். இவ் அரிய பெரிய பேற்றினை அடைந்ததே யோகம்—வாய்மையான யோகம்—சிவயோகம் என அறிதற்பாற்று. "கலங்காமலே வந்து காட்டினாய்" என்பதனால் சேவடி கண்டபின் மனம் ஊசலாடுவதாகிய அவச்சலனம் ஒழிந்து மதியோடு ஒன்றி நிறை பெற்றமை கூறப்பட்டது. அசுத்த அசைவாகிய அவச்சலனம் அடைந்த அழுக்கு மனம் அவ் அழுக்கு நீங்கி மதியோடு மதியாகிய பதியோடு ஒன்றி நிறை தழுவி நிற்பதே—அசையாமல் அசைவதே "பொன்னூசல் ஆடுதல்" என்பது இப் பெற்றி கைவரப் பெறவேண்டும் என்பதே திருவாசகத் திருப்பொன்னூசற் பதிகத்தால் கூறப்பட்டது. மனமும் மதியும் ஒன்றிய இடமே அமல முதற்படி. மலதேகம் விமலதேகமாய் பொன் தேகமாய்—ரக்ஷக தேகமாய் இடபதேகமாய் மாறிய இடம் இதுவே என அறிக. வாய்மையான யோகப் பயனாகிய இப்பெற்றி கைகூடப் பெற்று மனமாகிய வாசியை—வாசியாகிய குண்டலியை—குண்டலியாகிய சரீரத்தை வசப்படுத்திய மெய்யடியார் பிணி மூப்புச் சாக்காடுகள் நீங்கி நித்தியத்துவம் அடைவர். பின்வரும் பிரபல சுருதிப் பிரமாணம் இவ் வுண்மையை நன்கு வற்புறுத்துதல் கண்டு கொள்க.

சுவேதாசுவதர உபநிடதம்

ப்ருதிவ்யாப் தேஜோ நிலகே ஸமுத்திதே
பஞ்சாத்மகே யோக குணே ப்ரவ்ருத்தே
நதஸ்யரோகோ நஜரா நம்ருத்யு :
ப்ராப்தஸ்ய யோகாக்னி மயம் சரீரம்

(இ.-ள்.) ஐந்து தன்மைகளையுடைய பிருதிவி முதலிய பஞ்ச பூதங்களும் (அசுத்த பௌதிக சரீரம்) வெல்லப்பட்ட போது, (வாய்மையான) யோகத்தின் பயனான சகல ஐசுவரியமும் உண்டான போது, (அமல முதற்படி அடைந்த போது என்பது), யோகத்தாலான தேசோமயமான (பொன்மயமான) சரீரத்தை அடைந்தவனாகிய அவனுக்கு (மாறிப் பிறந்து விதேகம் பெற்றவனுக்கு) நோயில்லை; ஜரை இல்லை (நரை திரை மூப்புப் பிணி இல்லை) மரணம் இல்லை என்பதாம்.

விமலம் பெற்ற இவன் தூலம், வாதம் முதலிய பிணிகட்கும் காமம் கோபம் முதலிய குணங்கட்கும் காரணமாகிய அசுத்த நிறை நீங்கப் பெற்றமையால் பிணி மூப்புக்களால் பிணிவலடைய மாட்டாது. மற்றோ, இத்தன்மை வாய்க்கப் பெற்ற இந்திரனுகிய இவ் வழியடியான் சரசநிட்டையாளனும் உலகர் போல் வாழ்ந்து வேண்டிய முன்னிலைகளை நிறைகண்டு பஞ்சிகரணித்து அமலப்படி யேற்றம்

பெற்றுத் தனது விமல தேகம் அமலமாகப் பெற்று—சூக்குமமாகப் பெற்று (ஓ வடிவம்) அதனோடு சிதாகாசப் பெரு வெளியில் மறைந்து உண்மை முத்தி அடைவான் என்பதே இவ் அரிய பெரிய உபநிடதச் சுருதி நுதலிய பொருளாகும் என அறிதற்பாற்று. வேண்டியவற்றை யெல்லாம் வேண்டியவாறு அடைதற் கேற்ற அருந்தவமும் இதுவேயாம்.

குறள்

வேண்டிய வேண்டியாங் கெய்தலாற்
[செய்தவ
மீண்டு முயலப் படும்.

(ஷை 27ம் அதி. தவம் செ. 5.)

என எமது பொய்யில் புலவர் விதந்து கூறிய தவமும் இதுவேயாம். மனமும் மதியும் ஒன்றுதலாகிய அமல முதற்படி கண்ட வழியடியார், நினைத்த யாவும் முன்வந்து நிற்குமாதலால், தமது ஆக்கத்துக்கு—அமல விளைவுக்கு வேண்டிய முன்னிலைப் பொருள்களை யெல்லாம் வேண்டியவாறு எளிதிற் பெற்றுத் தமது உடலும் உயிரும் ஒழிவற ஒன்றிச் சூக்குமமாய்க் காரணத்தில் ஒடுங்கி நித்தியத்துவம் அடைய வல்லாரவர். இவர் மாண்பு முன்னம் பல கட்டுரைகளில் விரித்துக் கூறப்பட்டனவாதலின் ஈண்டும் விரித்தல் மிகையாகும்.

உலகர் போல் வாழ்ந்து இல்லற ஒழுக்க முடையராய் முன்னிலைகளை நிறைகண்டு பஞ்சிகரணித்து—அருந்தல் பொருந்தல் அடையப் பெற்று இயற்கை முறையான் அமைந்த உண்மைச் சாதகங்களால் அடையப்படும் இத்தகைய அரிய பெரிய சிவயோகத்துக்கும், இயற்கை விரோதமாகக் காடு மலைகளிலும் பிற இடங்களிலும் ஒருபால் ஒதுங்கி மூச்சை வலிதின் ஒட்டிப் பிடித்து எங்கும் ஓடாமல் சாதித்து வாயோடு கண்மூடி மயக்கமுற்று மெய்யுணர்ச்சி இன்றி வீற்றிருக்கும் அவயோகமாகிய "அசட்டு" யோகத்துக்கும் உள்ள இடையீடு அருளுக்கும் மருளுக்கும் உள்ள இடையீடு போல்வதாய் அளவிடற்கு அரிதாகும். மூச்சை வெளிவிடாது வலிதின் அடக்குவதே சிவயோகம் என அமைதல் இந்திரியத்தை வெளிவிடாது அடக்கிக் காப்பதே "இந்திரிய நிரோதம்" என அமைந்து அலமருதல் போன்றதோர் மூடக் கொள்கையேயாகும். இன்ன நீரராகிய அசட்டு யோகிகள் இவ்வாறு எத்துணைக்காலம் வீற்றிருப்பரே யாயினும் எம்பெருமான் திருவடியைக்காண மாட்டாதவராய் அசேதனமாய் மாண்டு பிறவி வலைப்படுபவரே என்பதனை நன்கு புலப்படுத்தும் பிரமாணங்கள் தத்துவப் பெரியார் அருளிய வேத நூல்களிலும் பிற நூல்களிலும் மிகப்பலவாய் உள்ளன. அவற்றுள் ஒரு சில இங்கே காட்டப்படுகின்றன.

திருமந்திரம்

அஞ்சு மடக்கடக் கென்ப ரறிவிலா
ரஞ்சு மடக்கு மமரு மங்கிலை
யஞ்சு மடக்கில சேதன மாமென்றிட்
டஞ்சு மடக்கா வறிவறிந் தேனே.

(ஷை 7-ம் தந்-25வது, ஐந்திந்திரிய மடக்கு
[முறைமை, செ. 3.)

[ஐம்புலன்களையும் நிறை முறையோடு நுகர்தலாகிய அருந்தல் பொருந்தல்களால் உய்தியடையாது இயற்கை விரோதமாக அவற்றை அடக்குவது அறிவிலார் மாண்பு என்பதும் அமல முதற் படி கண்ட வழியடியாராகிய அமரர் தாமும் ஐம்புலன்களை நிறையோடு நுகர்ந்து படியேற்றம் பெறுபவரே யன்றி அவற்றை இயற்கை விரோதமாக அடக்குபவரல்லர் என்பதும், ஐம்புலன்களையும் அநுபவித்து உய்தியடைய அறியாது அவற்றை அடக்குவதால் அஞ்ஞானம் என்னும் அசேதனத்துவமே உளதாகுமன்றி மெய்யுணர்ச்சி கைவரமாட்டாது என்பதும் பசுமரத்து ஆணிபோல் இம்மந்திரத்தால் நன்று வலியுறுத்து நிலை நாட்டப்பட்டமை கண்டு கொள்க.]

எண்ணு யிரத்தாண்டு யோக மிருக்
[கினுங்
கண்ணு ரமுதனைக் கண்டறி வாரில்லை
யுண்ணாடி யுள்ளே யொளிபெற நோக்
[கிடிற்
கண்ணாடி போலே கலந்திருந் தானே.

(ஷை 3ம் தந்-7வது தியானம், செ. 6.)

சவிகற்ப நிர்விகற்ப நிட்டையாளராய்ப் பல்லாயிரம் ஆண்டுக் கணக்காக அசைவற வீற்றிருப்பவரே யாயினும் அவர் இறைவன் திருவடிகளைக் கண்டு உய்தியடைய மாட்டாதவரேஎன்பது இம்மந்திரத்தால் நன்று வலியுறுத்தப்பட்டமை கண்டு கொள்க. எத்தனையோ குட்டிச் சித்தர்களும் போலிச்சாமிமாரும் இமயம் முதலிய மலைச்சாரல்களிலும் பிற இடங்களிலும் இவ்வகையான அசட்டு யோகத்தை அநுட்டித்து மெய்யுணர்ச்சி யின்றிப் பிணம்போலக் கிடக்கின்றார்கள் என்ப. உலகமாக்கள் இவர்களையே பெரிய தவசிகள்—சித்தர்கள்—சைவர்கள் என்று மருளுகின்றார்கள். இவர்கள் குருவருளால் உலகர்போல் வாழ்ந்து அருந்தல் பொருந்தல் அமையப் பெற்றாலன்றி, இந்த நிலைமையில் எத்துணைக் காலம் கிடப்பவரே யாயினும் இறைவன் திருவடி கண்டு உய்தியடைதல் முயற்கொம்பேயாகும். சற்குருநாதன் அருளும் வாய்மையான சாதகயோகங்களை அநுட்டித்து உடலகத்து ஒளிபெற நோக்குவதால் அவ் உடலம் அசுத்த நிறை நீங்கி அமலமடைந்து கண்ணாடியின் தன்மையை அடைய வேண்டும். அஞ்ஞான்று சத்தாகிய அவ் "ஈனமில் காயம்" ஆகவே இறைவன் வீற்றிருப்பன். இது பற்றியே "கண்ணாடிபோலே கலந்திருந்தானே." என்றனர் திருமூலர் என்க. "ஈனமற்ற காயமாய் இருப்பன் எங்கள் ஈசனே." எனச் சிவவாக்கியர் அருளியதும் அறிக. கண்ணாடிக்குக் கறுத்த நிழற்சாயை உண்டோ? இல்லை. ஊனம் அற்று அத்தன்மையை அடையவேண்டும் இத்தேகம் என்க. பிரணவ வடிவம் என்னும் ஓ வடிவம் இதுவே யாகும். இது தான் சிவன்

முத்த நிலை பூரணப்பட்ட தத்துவப் பெரியார் வடிவம் என்க. இது ஊனம் அறவே ஒழிந்து ஒளிமயமான வடிவமாதலின் நிழற் சாயை இல்லாதது; பரிசத்துக்குப் புலப்படாதது. இவ்வடிவமே அருளாகிக் கரைந்து ஞானாகாசத்தில் — சிதாகாசப் பெருவெளியில் மறைதற்கு உரியது என அறிதற்பாற்று.

ஒழிவிலொடுக்கம்

அறிவடங்கா வாயு வடக்கவசை வற்றத்
தறியிருந்தாற் போலச் சமாதி—பெறுகி
னடந்த குருட்டமே னஞ்சருந்திப் பாழூர்க்
கிடந்தகுழிப் புக்கதினுங் கேடு.

(ஷை-இயோகக் கழற்றி, செ. 3)

இவ்வாறு வரும் பிரமாணங்கள் பல. அவற்றை மேலும் காட்டப்புகின் மிக விரியும். இவற்றால் வாயுவை வலிதின் அடக்கி வாயோடு கண்மூடி ஓராங்கு வீற்றிருத்தல் வாய்மையான யோகம் அன்று என்பதும் அதனால் யாது பயனும் இல்லை என்பதும் வெள்ளிடையாம்.

“ஹடயோகமே” உண்மை யோகம் எனவும் நித்தியத்துவம் அளிப்பது எனவும் புகழ்ந்து போற்றுவர் உலகினர் பல்லோர். ஹடயோகம் மூச்சுப் பயிற்சியால் ஆசனத்து இருந்தபடியே மேலெழும்பச் செய்வது. வடதேயங்களில் இது மிகவும் போற்றப்படுவது. மேனாட்டாரும் சிலர் (Hata Yoga என்று) இதனைப் புகழ்ந்து கூறியிருக்கின்றனர்; போக்கை வாயன் போரிமாவை மெச்சியது போல. இராமதேவர் என்னும் சித்தர் “தண்டகபட்சணி” என்னும் நூலில் ஹடயோகத்தைப் பின்வரும் செய்யுளால் கண்டித்தனர்.

“சிவயோகம் மெய்ஞ்ஞான
வாழ்வேயாகும்
நிர்ச்சயடா காயசித்தி கணத்
திலாகும்
அவயோகம் அடயோகஞ்
செய்யாதே நீ
ஆச்சரியம் ராஜயோகந்தான்
பாரு
தவயோகக் குண்டலியே சத்திசத்தி
சார்ந்தறிவாயிலட்சியம் பூரண
ந்தானுச்சு
நவமூலமனு வனுவாய் மேருவாச்சு
லட்சியமே யதிதமடா மோட்சந்தானே.

(ஷை-செ. 106.)

மூச்சுப் பயிற்சியே (Breathing Exercise) “பெரியோர் கண்ட யோகம்” எனவும் “மடை மாறுதல்” எனவும் “சாகாத்தலை” எனவும் “யாமே இதனைப் பயிற்ற வல்லேம்” எனவும் விஞ்ஞாபனஞ் செய்து இவ் அசட்டு யோகத்தைப் பயிற்றி உயிர் வாழ்வோரும் உளர். மூச்சை வலித்து இழுத்து அடக்கிப் பயிலுவதால் ஆரம்பத்தில் செந்நீர் ஆக்கமுறுவது போலவும் சரீரம் வலுவடைவது போலவும் காணப்பட்டு காலம் செல்லச் செல்ல அசுத்த நிறையே அதிகரித்து வாத பித்த சிலேத்துமங்களின் நூன மிகுதியால் பௌதிகங்கள் பேதப்பட்டுப் பரிதாபகரமான சாதல் ஏற்படுவதே யன்றி நித்தியத்துவம் உளதாவதென்பது முயற்கொம்பேயாகும். பின்வரும் சித்தர் திருவாக்கு இவ்வாறான அசட்டுயோகம் பயிற்ற முயல்வோர்க்கு உண்மையை நன்கு புலப்படுத்தும்.

சட்டைமுனிவர் குரு சூத்திரம்

பார்த்துச்சிலநூல்பாடினதைக்கற்றுக்
காற்றையடைத்துக் கனயோகி யென்று
சேர்த்துச் சீடரைச் செய்துபதேசம்
கூத்திதுவாகும் கூடாது முத்தியே.

(ஷை-செ. 20)

வாசியை வாசி என்னும் குதிரையை வசஞ் செய்து அதனை வாகனமாகக் கொண்டவரே முத்தி நெறி சென்று நித்தியத்துவம் பெறவல்ல மெய்யர். இவர்க்கு வாசியாகிய குதிரை பற்றுக் கொடுக்கும்; வீட்டு நெறி யாத்திரையில் இடையீடின்றி எளிதிற் கொடு சென்று உய்க்கும்; மாயைப் போருக்கு—குூ சம்மாரத்துக்கு உதவி புரியும்—பாச நீக்கத்துக்கு உறுதுணையாகும் என்க. வாசியை உறவு செய்ய அறியாது இயற்கை விரோதமாக அதனை வலிதின் அடக்கி வருத்துவோரே பொய்யர். தன்னை உறவு செய்ய அறியாது பகைத்து வருத்தும் பொய்மையாளராகிய இவரை வாசி என்னும் இவ் அரிய பெரிய குதிரையானது தானும் பகைத்துப் பற்றுக் கொடாது பழிவாங்கிவிடும்—துள்ளி விழுத்திவிடும் என்க. அதனால் நித்தியத்துவம் அடைய முடியாது தமது உடலில் அசுத்த நிறை அதிகரிக்கப் பட்டுக் காமம் கோபம் முதலிய படைகளால் நலிந்து மாயைப் போருக்கு ஆற்றாது வாத பித்த சிலேத்துமங்களின் நூன மிகுதியால் பௌதிகங்கள் பேதித்து மூலாக்கினி அப்புக் கூற்றுக்கு அடக்கமாக அசுத்த ஐ என்னும் சிலேத்துமம் மேலிடுதலாகிய சன்னி (Coma) என்னும் எமவேதனைப்பட்டு உடல் பிணமாகி விழ மாண்டு பிறவி வலைப்படுவர் இப்பொய்ம்மையாளர் என அறிக. இவ் வுண்மையையே பின் வரும் மந்திரத்தால் வற்புறுத்தி யருளினார் எம் அண்ணல் திருமூலர் என அறிக.

திருமந்திரம்

ஐவர்க்கு நாயக னவ்வூர்த் தலைமக
னுய்யக்கொண் டேறுங் குதிரைமற் [றொன்றுண்டு
மெய்யர்க்குப் பற்றுக் கொடுக்குங்
[கொடாதுபோய்ப்
பொய்யரைத் துள்ளி விழுத்திடுந் தானே.

(ஷை-3ம் தந். பிராணாயாமம் செ. 1.)

மெய்யடியார் எல்லாம் வாசிக் குதிரையில் ஏறிக் கயிலை புக்கவரே யாவர்—வாசியாகிய குண்டலியை குண்டலியாகிய சரீரத்தை வசப்படுத்தி—அமலமாக்கி அமலமடைந்த அவ்வுடலோடு மறைந்து உண்மை முத்தி அடைந்தவரே யாவர். அறுபத்து மூவருள் ஒருவராகிய சேரமான் பெருமான் நாயனார் குதிரையில் ஏறிக் கயிலை புக்கனர் என்னும் கற்பனையின் இரகசியார்த்தமும்—உண்மைப் பொருளும்

இதுவே என அறிதற்பாற்று. வேத உண்மைகளெல்லாம் நிறை முறையான கற்பனைகளாகவே கூறப்படும். இவற்றின் உண்மைப் பொருள் குருவருளாலன்றி அறிய முடியாதன. இவற்றுக்குத் தூலப் பொருளாகிய பொய்ப்பொருள் கண்டு மயங்குவது உலகியல், வாசியை வசப்படுத்துவதே உயிர் நிலை எனப்படும் பிராணாயாமமாகும். வாய்மையான பிராணாயாமம் கைவரப் பெற்ற மெய்ம்மையாளர் உடலை விட்டு உயிர் பிரியுமா? பிரியமாட்டாது. பிராணாயாமம் என்பதற்கு மூச்சை அடக்குதல்—பிராணனை வலிதிற் றடுத்துப் பயிலுதல் எனப்பொருள் கூறுவது தவறு. இது மெய்யடியாராகிய வித்தகர்க் குரிய யோகமன்று. சற்குருநாதன் அருளால் இயற்கை முறையான அருந்தல் பொருந்தல்களால் பௌதிக பஞ்சீகரண நிறையைச் சமப்படுத்துதலாகிய வாய்மையான இயம நியமாதிகளை அநுட்டித்துக் காற்றைப் பிடிக்கும் கணக்கறிந்து ஒழுகும் சிவயோகிகளாகிய மெய்யடியார் உடல் பிணமாகி விழ மரணமடையாது கூற்றனை உதைத்து—விதியை வென்று நித்தியத்துவம் பெறுதல் வேத உண்மையாகிய சத்தியமே யாகும்.

திருமந்திரம்

ஏற்றி யிறக்கி யிருகாலும் பூரிக்குங்
காற்றைப் பிடிக்குங் கணக்கறி வாரில்லை
காற்றைப் பிடிக்குங் கணக்கறி வாளர்க்குக்
கூற்றை யுதைக்குங் குறியது வாமே.

[ஷை-3ம் தந். பிராணாயாமம் செ. 23.)

இது காறும் கூறியவைகளால் குருவருளால் பெறப்படும் அருந்தல் பொருந்தல் என்னும் நிறை முறையான சாதகங்களால்— இயம நியமாதிகளால் மனமும் மதியும் ஒன்றுநிலை வாய்மையான யோகம்—சிவயோகம் என்பதும், வாயுவை வலிதில் தடுத்து வாயோடு கண்மூடி ஓராங்கு வீற்றிருத்தல் பிறவி நெறிகாட்டும் அசட்டு யோகமே என்பதும், வாய்மையான சிவயோகிகள் மரணமடையாது உடலும் உயிரும் ஒழிவற ஒன்றி நித்தியத்துவம் அடைவர் என்பதும் ஒருவாறு உணரத்தகும்.

சுபம்.

புத்தக மதிப்புரை

பயிற்சி மாலை (க—ம் மலர்)

இது, தமிழ்ப்பாடசாலைகளில் நிகழும் தற்காலப் படிப்பு முறைக்கு ஏற்ப அரசாங்க வித்தியா பகுதியாருடைய பரீட்சா பத்திரங்களைத் தழுவி இலக்கண விளக்கங்களும் வசனம் எழுதும் முறையும் பங்கீகரணமும் சொற்பொருள் விளக்கமும் அமைய எழுதப்பட்டதோர் சிறிய நூலாகும். தமிழ்ப் பள்ளிக்கூட மாணவர்க்கும் ஆங்கில பாடசாலைகளில் தமிழையும் ஒரு பாடமாகக் கொண்டுபயிலும் மாணவர்க்கும் மிகப் பயன்படுமாறு அமைந்துள்ளது. ஆக்கியோரது தமிழ்ப் புலமையையும், நுண்மாணுழை புலத்தையும் இடைவிடில்லா உழைப்பையும் நன்கு புலப்படுத்துகிறது. இதனை இயற்றியோர் எமது "வித்தக" நிருப நேயர்களுள் ஒருவரும், மதிப்பொலிவிற் சிறந்த அறிஞர் ஸ்ரீ-மாக் அ. பொன்னையா பிள்ளை அவர்களை அதிபராகக் கொண்ட யாழ்ப்பாண அரசினர் ஆசிரிய கல்லூரியில் பயின்று யோக்கியதா பத்திரம் பெற்ற ஆசிரியருமாகிய யாழ்ப்பாணத்து வேலணையூர்பண்டித ஸ்ரீ மாக். கா. போ. இரத்தினம் அவர்கள் ஆவர். வயசிற் சிறியரும் அறிவிற் பெரியருமாகிய எமது பண்டிதர் அவர்கள் மேலும் இது போன்ற பல நூல்களை இயற்றி உலகிற்கு உபகாரியாய் வாழும்படி திருவருளைப் போற்றுகின்றோம். [ப—ர்.]

—o-o—

"வித்தகம்"
பழைய பிரதிகளின் கிரயம்

1-வது நெம்பர் தனிப்பிரதி விலை அணா 4.
2-வது ,, ,, ,, 4.
3-வது முதல் 20-வது வரையில் பிரதி ஒன்றுக்கு விலை அணா 2.

வேண்டுவோர் தபால் முத்திரை அனுப்பி பெற்றுக் கொள்ளலாம்.

வித்தகம் ஆபீஸ்.
புதுவை.

வித்தகம்

முதல் வருட ஆறுமாத சஞ்சிகைகள் புத்தகமாக கட்டப்பட்டன.

		ரூ.	அ.	ப.
முதுகில் தோல்—கலிக்கோ (Half Leather—Calico Bound)	...	2	8	0
முழு கலிக்கோ— (Full Calico Bound)	...	2	4	0
முதுகில் கலிக்கோ—மார்பில் தாள் (Calico-marble Bound)	...	2	0	0

(தபால் செலவு பிரத்தியேகம்)

வித்தகம் ஆபீஸ்,
புதுவை.